"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 9

## புலன்மொழித்தேர்வு

**கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்**

**சுட்டெண் :** ____________________

**அ - பகுதி**

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும், பிழையாயின் × எனவும் பெட்டியினுள் அடையாளமிடுக.**

1. ஈழம் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள தீவு ஆகும். ☐

2. 'சிறிலங்கா' என்பது ஈழத்திற்கு வழங்கப்பெறும் தொன்மையான தமிழ்ப்பெயராகும். ☐

3. ஈழத்தில் வாழ்ந்து வரும் இனங்களுள் தமிழர்களுக்குத் தொன்மையான வரலாறு உண்டு. ☐

4. இயக்கரும் நாகரும் ஈழத்தின் தொன்மைக்குடிகளாவர். ☐

5. கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுகள் கிடைத்த இடங்களுள் அம்பாறையும் ஒன்றாகும். ☐

6. கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே தமிழர் வணிகத்தில் ஈடுபட்டமையைக் கல்வெட்டுகள் உறுதிசெய்கின்றன. ☐

7. வணிகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி ஈழத்தில் கிராமங்கள் தோன்றுவதற்குக் காரணமாகியது. ☐

8. கந்தரோடை, மாந்தை போன்றன முதலில் நகரங்கள் உருவான இடங்களுள் சிலவாகும். ☐

**(8×½ =4புள்ளிகள்)**

## ஆ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரையாடற்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்தின் வலுப்பொருந்திய அரச தலைநகராக விளங்கியது எது?

______________________________________________

2. எல்லாள மன்னன் இன்றுவரை அனைவராலும் மதிக்கப்பெறுவதற்கான காரணம் என்ன?

______________________________________________

3. ஈழத்தில் சோழர் ஆட்சி நிலவிய போது ஏற்பட்ட மாற்றங்களுள் ஒன்றினைத் தருக.

______________________________________________

4. யாருடைய ஆட்சியில் சிங்கள மக்களும், சிங்கள மன்னர்களும் தெற்கு நோக்கி நகர்ந்தனர்?

______________________________________________

5. வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சி நிலவிய பகுதி எது?

______________________________________________

6. நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு எது?

______________________________________________

**(6×1=6புள்ளிகள்)**